
# ஆத்மஜோதி



பாருயர் இன்ப மேகின் பணிதரும் இன்ப மாறுய்
சீருயர் புத்த தேவா சேவடி பணிகின் றேனே.

# ஆத்ம ஜோதி

ஓர் ஆத்மீக மாதவெளியீடு

எல்லா உலகிற்கும் இறைவன் ஒருவனே
எல்லா உடலும் இறைவன் ஆலயமே

—சுத்தானந்தர்

சோதி 4 | நந்தன ௵ வைகாசிமீ 10 திகதி | சுடர் 7

## பொருளடக்கம்


| விஷயம் | | பக்கம் |
|---|---|---|
| புத்தர் தோத்திரம் | | |
| சித்தார்த்தன் துறவு | கவிமணி தே. வி. | |
| புத்தர் காட்டிய புனிதப்பாதை | ஆசிரியர் | A |
| நான் பலிடுத்லே | சோ. ராமசாமி | E |
| புத்தருபதேசம் | சுத்தானந்தர் | 169 |
| பெரியார் வாய்மொழி | ராமக்கிருஷ்ணர் | 170 |
| ஒரு பெண் துறவி | வெங்கடசாமி | 171 |
| துறவி கவனிக்கவேண்டியவை | | 173 |
| புத்தரோடு புகுந்த புத்துயிர் | புத்ததாஸர் | 175 |
| பெரியோருரை | ச. மு. பிள்ளை அவர்கள் | 178 |
| [illegible] | சாஸன் | 180 |
| புத்தர் அருள்வாக்கு | | 183 |
| கண்டேன் இலங்கை | சுத்தானந்த பாரதியார் | 186 |
| செய்தித்திரட்டு | | 188 |


ஆத்மஜோதி சந்தா விபரம்

ஆயுள் சந்தா ரூபா 75|— வருட சந்தா ரூபா 3|—
தனிப்பிரதி சதம் 30|—

## புத்தர் தோத்திரம்.

முன்றான் பெருமைக்க ணின்றான்முடி வெய்துகாறும்
நன்றே நினைந்தான் குணமேமொழிந்தான் தனக்கென்
றொன்றானு முள்ளான் பிறர்க்கே யுறுதிக்குழந்தா
னன்றே யிறைவ னவன்றாள் சரணங்களன்றே. —குண்டலகேசி

உலகமூன்று மொருங்குட னேத்துமாண்
டிலகமாம் திறலரி வன்னடி
வழுவினெஞ் சொடுவாலி தினாற்றவுந்
தொழுவல் தொல்வினை நீங்குக வென்றியான், —வளையாபதி

பொருந்து போதியில் இருந்த மாதவர்
திருந்து சேவடி மருந்தும் ஆகுமே.

போதி நீழற் சோதிபாதம்
காதலால் நின்றேத்தல் நன்றே —வீரசோழியஉரை

திருமேவு பதுமஞ்சேர் திசை முகனேமுதலாக
உருமேவி அவதரித்த உயிர்அனைத்தும் உயக்கொள்வான்
இவ்வுலகும் கீழுலகும் மிசையுலகும் இருள்நீங்க
எவ்வுலகும் தொழுதேத்த எழுந்த செழுஞ்சுடரென்ன
விலங்குகதிர் ஓர்இரண்டும் விலங்கிவலங் கொண்டுலவ
அயங்குசினைப் போதிநிழல் அறம் அமர்ந்த பெரியோய் நீ!

—நீலகேசிஉரை.

# சித்தார்த்தன் துறவு.

“இதுவே காலம், இதுவே காலம்
இமைப் பொழுதேனும் இனியான் இங்கிரேன்;
யாதுந்தடையிலை; இறங்கிச் செல்வேன்;
பிரியாநாம் இனிப் பிரிவோ மாயினுங்
குறையொன் றதனாற் கூறுதற் கில்லை.
படியில் எனக்குப் பரம்பரையாய் வரும்
முடிமீதுஆசை முழுவதும் விட்டேன்,
வாழும் மன்னரை வாட்கு இரையாக்கி,
நீணிலம் பற்றும் நினைப்பும் ஒழிந்தேன்
சிறுமைதந்திடும் தீவினைபுரியேன்;
பொறுமைநிதமும் போற்றி ஒழுகுவேன்
ஏழைப்பிராணி எதனோடும் அன்பாய்த்
தோழமைபூண்டு துணைசெய்திடுவேன்;
பணிசெய் பள்ளர் பறையர் அணியும்
துணியை அரையிற் சுற்றித் திரிவேன்;
தெருத்தெருவாகத் திரிந்துபெற்ற
பருக்கையை உண்டு பட்டினி போக்குவேன்;
இரவும் பகலும் எவ்வேப்பொழுதும்
பாரில் உயிர்கள் படுதுய ரெல்லாம்
புகுந்து என்னுள்ளம் புண்படுகின்றது. ஆதலின்
இன்ப வாழ்வை இகழ்ந்து நீக்கினேன்;
துன்பவாழ்வைத் துணிந்து போற்றினேன்,
நீணிலமீது நித்தியானந்த
வாழ்வையடையும் வழியிது என்று
தீவிரமான தியாகத்தாலும்
ஒப்பிலாத உழைப்பினாலும்
அறியலா மென்னில் அறிந்து வருவேன்;
வாடிவருந்தி மன்னுயிரெல்லாம்
அடையுந்துன்பம் அனைத்தும் ஒழிப்பேன்”
என்றுகூறி இரவில் இறங்கினன்
நன்று நாடிய ஞானிசித் தார்த்தனே.

—கவிமணி தே. வி.

# புத்தர் காட்டிய புனிதப் பாதை.

(ஆசிரியர்)

இந்துக்களுக்கும் பௌத்தர்கட்கும் ஒவ்வொரு மாசத்திலும் பூரணை திதிபுண்ணிய நாளாகும். அவற்றுள் சித்திரா பூரணை விசேட முடைத்து சாந்திரமாசக் கணக்கின்படி வைசாகப் பௌர்ணமி என்றழைக்கப்படும். சித்திரா பூரணை பகவான் புத்தரின் அவதாரத்தினாலும், அவரது ஞான உதயத்தினாலும், பரிநிர்வாணத்தினாலும், மூன்றுமுறைபுனிதமுற்றகாரணத்தினால், பௌத்தர்கட்கு, மிகவும் விசேடித்த புண்ணிய நாளாகும். புத்தர் பெருமானின் அற்புத வரலாற்றினைப்படிப்பதற்கும், அவரது அரியஉபதேசங்களைச் சிந்திப்பதற்கும் இப்புனிததினத்தை விடகூடிய சிறப்புற்ற தினம் பிறிதொன்றில்லையெனலாம். அப்புண்ணிய புருஷனின் குணாதிசயங்களைப்படிக்கும் பொழுதும் கேட்கும்பொழுதும், அவர் வாழ்க்கையாலும் வாக்காலும் விளக்கிய வழியை நாம் எவ்வளவு தூரம் பின்பற்றியுள்ளோம் என்பதை பரிசிலனை செய்வதற்கேற்ற சந்தர்ப்பம் நமக்குக் கிடைக்கின்றது.

சாக்கிய குலதிலகமான புத்தரின் பழையபெயர் சித்தார்த்தர். அவர் கி மு 563 ம் ஆண்டு சித்திரை மாசப் பூரணையன்று, காசிக்கு வடக்கே நூறுமைல் தூரத்திலுள்ள லும்பினி என்னுமிடத்தில், சுத்தோதன மன்னனுக்கும் மாயாதேவிக்கும் அருமைக் குமாரனாக அவதரித்தார். பிறந்த ஏழாம்நாள் தாய் மரணமடைய அன்னாரின் சகோதரியும் சுத்தோதனனின் இரண்டாம் மனைவியுமான மஹாபிரஜாபதி என்பளால் வளர்க்கப்பட்டார். சிறுவயதிலேயே மனப்போக்கில் துறவுக்குணங்களைக் கண்ணுற்ற தந்தை மிகவும் வருந்துவானாயினன். பதினெட்டாம் வயதில் பூர்வஜென்மத் தொடர்பால் சித்தார்த்தருக்கும் யசோதரைக்குமிடையே நிகழ்ந்த கண்கருத்தொன்றிய காதல் காட்சியால் சுத்தோதனனின் கவலை தீர்ந்ததெனினும், இல்லறத்தில் புகுத்தியதும் மகனை ஓர் இன்பக்கோட்டைக்குள் உலக இயல்பை அறியாமுறையில் அடைத்துவைக்கத் தந்தை திட்டம்செய்தனன். வாழ்ந்த நகரமாகிய கபிலவஸ்து உலகத்துயரின் வாடை சிறிதேனும் வீசாவிதத்தில். இளமையும் இன்பமும், ஆடலும் பாடலும், விருந்தும் வேடிக்கை விளையாட்டும் நிறைந்த இந்திரலோகமாக அமைக்கப்பட்டிருந்தது. பிணி. மூப்பு சாக்காடு

ஆகியமூன்றையும் பற்றி மகன் ஒன்றுந் தெரியாமல் வாழவேண்டுமென்பதே மன்னனின் கட்டளை. விதியையார்தான் வெல்லமுடியும்?

இவ்விதம் இன்பக்கோட்டைக்குள் அடைபட்டு யசோதரையுடன் இல்லறம் நடாத்தி, அந்த நல்லறத்தின் பயனாக ராகுலன் என்னும் செல்வனைப்பெற்ற சித்தார்த்தரின் மனம் உலகமக்களின் துயரத்தைப்பற்றியே சதா சிந்திக்கத் தொடங்கியது. இயல்பாகவே அவர்உள்ளத்தில்குமுறிக்கொண்டிருந்த துறவுவேட்கையை தந்தையின் சூழ்ச்சிகளும் அவன் சோடித்த இன்பத் தோற்றங்களும் தடுக்க முடியவில்லை, அரசன் அறியாமல் மாறு வேடம் பூண்டு வெளியேவந்து, நாலுகால்கொண்டு தவழ்ந்து, இருகாலால் நடந்து, மூன்றால் தள்ளாடி எட்டுக்கால் [நாலுபேர்] தூக்கிச் செல்ல எமலோகம் போகும்மனிதவாழ்க்கையின் இயல்பைநோயாளி, கிழவன், பிணம் மூன்றிலும் கண்டுகொண்டார். மணிமுடி தாங்கி மன்னர் மன்னனாய் நீணிலம்புரக்கும் நினைப்பு இறந்துபட்டது, உலகிலுள்ள உயிர்களெல்லாம் உய்யநாட்டையிழந்து நன்மனைவியையும் மகனையுந்துறந்து வீட்டைவிட்டகன்று தன்னந்தனியனாய் தரணியில் ஓர் ஆண்டியாக வாழ விரும்பினார், "விழி, எழு, துற, அறி!" என அவர் உள்ளத்தில் எழுந்த உணர்ச்சி சரியென்பதை விளக்குவது போல், ஓர் இரவு அரியமனைவி பயங்கரமான கனவு ஒன்றைக்கண்டு "காலம் வந்துவிட்டது! காலம்வந்துவிட்டது!" எனவாய்விட்டுப்புலம்பிய வார்த்தைகளையே குரு உபதேசமாகக்கொண்டு துறவுபூண்டார். அப்போது அவருக்கு வயசு இருபத்தொன்பதாகும். பிறரது துன்பங்களையும் துயரங்களையும் தன்னுடைய சொந்தமானவையாக உணர்ந்து மனம் நொந்து, அரசபோகத்தையும் ஆட்சியையும் மனை இன்பத்தையும் துறந்தவர்சித்தார்த்தர் ஒருவரேஇக்காரணத்தால்தான் "புத்தரின் துறவுபெருந்துறவு" என இன்றுவரைக்கும் பெரியாரால் பாராட்டப்படுகிறது.

ஆறுவருஷக் கடுந்தவத்தின் பயனாககாயாவிலுள்ள அரசமரத்தடியில் சித்திரைமாசமும் பூரணைத்திதியும் கூடியபுனிதவேளையில் சித்தார்த்தர் ஞானக்காட்சிபெற்று புத்தராக மாறினார், புத்தர் என்னும் பதம் பரிபூரணஞானம் பெற்றவரென்பதைக்குறிக்



கும். ஞானசித்தியடையுமுன் அவர் மாரனின் சோதனைக்குள்ளானார். அப்பொழுது அவர் மன்மதனுக்குக் கொடுத்த துடுக்கான பதில் ஆத்மீகசாதகர்களுக்கு எக்காலத்திலும் உறுதிதரவல்லதாகும். அவர் கூறிய சபதம் பின்வருமாறு:- "பர்வதராஜனாகிய மேரு தன் நிலைகுலையலாம். அண்டங்களெல்லாம் துகளாகி ஆகாயத்தில் மறைந்துவிடலாம். சூரியன், சந்திரன், நட்சத்திரங்களெல்லாமும் தத்தம் போக்கிலிருந்துபிசகலாம், உலகிலுள்ள உயிர்களெல்லாம் ஒரேமனப்பான்மையைப் பெற்றுவிடலாம், சமுத்திரங்கூட வரண்டுவிடலாம். ஆனால் ஓமன்மதா! நான் தீர்மானித்துள்ள விரதத்தினின்று நீ என்னை அணுவளவேனும் அசைக்கமுடியாது" இத்தகைய மன உறுதியில்லாமல் துறவு பூண்போர் விசுவாமித்திரரடைந்த வெட்கங்கெட்ட நிலையையே நாளடைவில் கண்ணுவரென்பது திண்ணம்.

காயாவில் போதிமரத்தின்கீழ் ஞானோதயமானபின் புத்தர் காசிக்கருகிலுள்ள சாரநாத்தையடைந்து "மான்சோலை" என அழைக்கப்பட்ட ஓர் அமைதியான இடத்தில் ஐந்து சீடர்களுக்கு துன்பத்தின் மர்மத்தையும் அதைக்கடக்கும் மார்க்கத்தையும் உபதேசித்தருளினார். பௌத்தமத சக்கிரம் முதலில்சுழற்றப்பட்ட இடமான சாரநாத் ஆயிரம் ஆண்டுகள்வரை அந்தமதத்தொடர்பில் மிகவும் முக்கிய ஸ்தானம் வகித்துள்ளது. சீடர்கள்பலர் சேர்ந்து உலகெங்கும் பௌத்தமதத்தை ஒருதுளி இரத்தஞ்சிந்தா முறையில் பரவச்செய்ததும் அங்கிருந்தேயாம். கி. பி. ஐந்தாம் நூற்றாண்டில் இந்தியயாத்திரை செய்த பாஹியான் என்ற சீனப் பெரியாரின் குறிப்பின்படி சாரநாத்தில் உயர்ந்த விஹாரையில் பௌத்த விக்ரகம் ஒன்றும் அசோகரால் கட்டப்பட்ட தூணும் தூபியும் இருந்தன. இவையெல்லாம் தரைமட்டமானது, கி. பி. 1194ம் ஆண்டில் காசியைக் கொள்ளையடித்த குத்புதீன் காலத்திலாகும். இன்று சாரநாத் செல்வோர் காணக்கூடிய அதிசயமானபொருள் மூலகந்தகுடி விஹாரை மாத்திரமே. இது சென்ற நூற்றாண்டில் பௌத்தமத பிரசாரத்திற்கே தமது ஆயுளை அர்ப்பணஞ்செய்த அநகாரிகதர்மபாலா அவர்களால் நிறுவப் பட்ட மகாபோதிக் கழகத்தின் முயற்சியால் கட்டப்பட்டதாகும்.

புத்தர்பெருமான் நாற்பத்தைந்து ஆண்டுகளாக மகதநாடெங்கும் தர்மோபதேசஞ்செய்தபின்னர் தமது எண்பதாவது வய

எனவே, நிலையற்றதா [பொய்யா]கிய அசத்து, அறியுந்தன்மை யற்றதாகிய சடமாயிருத்தலிலேயே உலகம் துன்பமயமாயிருக்கிறது. இத்தன்மையான துன்பம் கற்றறிந்தடங்கிய சான்றோராகும்' சான்றோர்துணைகொண்டு சன்மார்க்கமெதுவென அறிய அவாக்கொள்கின்றனர். அந்நிலையில் அவர்கள் வேட்டுவன் வலையில் அகப்பட்ட மானைப்போற் பதைபதைக்கின்றனர். இவ்வாறு தவிப்பதுஆதிதைவிதம், ஆதிபௌதிகம், ஆதியான்மிகமென்கின்ற மூவகைத் துன்பத்தளைகளினாற்கட்டப்பட்டதனாலன்றோ? துன்பத்தளையில் நின்றும் தவிப்பவனுக்கு இறைவனொருவன் உளன் என்னும் மந்தவுணர்ச்சி உண்டாகிறது:

இவ்வாறு உண்டாகவே சிறந்த ஆலயங்கள் தோறுஞ் செல்கின்றனர், நந்தீர்த்த மெவற்றினும் நானமாடுகின்றனர். திரு உருவங்களை வழிபட்டுத்தங்கள் குறைகளை முறையிடுகின்றனர். இவ்வாறு நற்கன்மங்கள் செய்வதனால் மெய்நெறியைக் காட்டும் சற்குருதரிசனம் உண்டாகும். குருதரிசனம் கைகூடவே துன்பத்தில் நின்றும் விடுவதற்கு நல்லுபதேச மொழிகளைப்பெறலாம். இக்கருத்தினை,

"மூர்த்தி தலம் தீர்த்தம் முறையாய்த் தொடங்கினர்க்கு
வார்த்தை சொல்லச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே"

என்று தாயுமானசுவாமிகள் அழகுற மொழிந்துள்ளனர்.

இதனாலே உலகிலுள்ள தீயதொழில்களை விடுத்து நற்றொழில்களில் ஈடுபடத் தொடங்குகின்றனர். நற்றொழில்களாவன:— பகவான் சந்நிதியை அலகிடல். மெழுகல், விளக்கேற்றல், மலர் மரங்களை உண்டாக்கல், அழகிய மாலைகள் புனைந்து அலங்கரித்தல், அன்புடன் வழிபடல், விழாவெடுத்தல், அடியார்கட்கேவல் செய்தல், பகுத்துண்டல் இவைபோல்வனவும். பிறவுமாம். இவ்வாறு நற்றொழில்களிற்காலங்களித்தும் துன்பம் ஓய்ந்தபாடில்லை. அதனாலே அவர்கள் உள்ளத்தில் மேலும் அதிக அன்பு உண்டாகித் தம்துயரை முறையிடுவர். இதனை

"நண்ணாதார் முறுவலிப்ப நல்லுற்றா (ர்) ரிரங்தேங்க
எண்ணாரத் துயர்விளைக்கு மிதுஎன்ன உலகியற்கை
கண்ணாளா! கடல்கடந்தாய்! உன்கழற்கே வரும்பரிசு
தண்ணாவா தடியேனைப் பணிகண்டாய் ........."

185ம் பக்கம்பார்க்க] (நாலாயிரப்பிரபந்தம்)

# புத்த தருமோபதேசம்.

(சுத்தானந்தர்)

"எல்லா வுயிர்க்கும் இன்பமோங் குகவே
கொல்லா நெறியே குலவுக வுலகில்
கலகம் ஒழிக, கருணை பொழிக!
ஞானம் ஓங்குக, ஞானிகள் ஓங்குக
தானம் ஓங்குக தவக்கனல் ஓங்குக
அறமோங் குகவே அறவோர் ஓங்குக
அறவோர் சங்கம் அருட்பொலி வெய்துக!
அனைவ ருள்ளத்திலும் அன்பே வளர்க!
தனைப்போ லெண்ணுக தான்பிற வுயிரை!
தூய்மை யுறுகவே சொல்மனஞ் செயலில்
வாய்மை யுறுகவே வாய்நடை நினைப்பில்
கருணை பொங்குக தருணமா மழைபோல்
இருவிகற் பொழிகவே இரவிமுன் பனிபோல்,
ஆசை பொறாமை ஆணவம் ஒழிக.
பாசம் விலகுக பந்தனை சிந்துக.
நேச மோங்கி நிலமெலாம் வாழ்க
தேசமெல்லாம் சீலவாழ் வோங்குக
இரும்பு விலங்கினும் இன்னலைச் செய்யும்
விருப்பு வெறுப்பாம் வேட்கை ஒழிகவே
பற்றின் வருவதே படுதுய ராகும்
பற்றற் றிருத்தலே முற்றிலும் இனி தாம்
பிறப்பவ ரெல்லாம் இறப்பவ ராவர்.
துன்பப் பிறவித் தொல்லை தீர
ஆசைத் துறவே மாசறு வழியாம்
இன்னுடல் வாழ்க்கை மின்னென மறையும்;
முன்வினைப் பயனே முடிவுறத் தொடரும்
தானமும் சீலமும் தயையும் தியானமும்
ஞானமும் போற்றுக நல்லற மிதுவே"
புத்தன் அன்புடன் புகன்றவை இவையே
துறவே புத்தர் சொல்லும் பொன்மொழி.

# பெரியார் வாய்மொழி.

பரப்பிரமத்தின் சொரூபத்தை எடுத்துச்சொல்லஇவ்வுலகில் ஒருவருக்கேனும் சக்தியிருந்ததில்லை. அப்பரம்பொருள் நாவினால் சொல்லமுடியாதது; மனதினால் நினைக்கமுடியாதது; புத்தியினால் அறியமுடியாதது.

வேதங்கள், புராணங்கள், தந்திரங்களுட்பட யாவும் உச்சிஷ்டம்: ஏனெனில், அவை மனிதர் வாயினால் உச்சரிக்கப்பட்டவை ஆனால், பிரம்மம் ஒன்றே உச்சிஷ்டமாகாதது.

—ராமகிருஷ்ணர்

ஆத்மவிசுவாசம் அல்லது தன்னம்பிக்கையை இன்னும் ஏராளமாக ஓர்ந்து அனுஷ்டானத்தில் கொண்டுவந்திருந்தால் நம்மைப் பிடித்துள்ள கேடுகளில் பலதுமே அழிந்துபட்டுப்போயிருந்திருக்கும். மானுடவர்க்கத்தின் வரலாற்றைத் துருவி ஆராய்ந்துபார்த்தால் பேருண்மையொன்றுபுலப்படும். அதாவது அரும்பெருங் காரியங்களைச்செய்து சாதித்த ஆடவர் மகளிர்களுக்குத்தன்னம்பிக்கை ஒன்றே போராற்றலைப்பெருமிதமாக அளித்துவந்திருக்கிறது. தன்னம்பிக்கையின்று அவர்கள் பெற்ற ஊக்கத்தையும் உறுதியையும் வேறு எதனிடத்திருந்தும் பெறவில்லை. மேலோர் ஆகப்போகிறோம் என்ற திட நம்பிக்கையுடன் கூடி அவர்கள் பிறப்பெடுத்தார்கள். ஆகவே அவர்கள் மேலோர் ஆயினர்,

—விவேகானந்தர்

மற்றவர்களிடம் பணிவாகவும் அடக்கமாகவும் நடந்துகொள்ளுகிறவனை ஆண்டவன் கௌரவிக்கிறான். தன்கண்களுக்குச் சிறியவனாகத் தெரியச்செய்கின்ற ஒருவனை, மற்றவர்களின் கண்களுக்கு மிகப் பெரியவனாகத் தெரிகிறான் இறைவன். அகம்பாவம் பிடித்தவனை ஆண்டவன் அவமானப் படுத்துகிறான். தன்னைத்தானே பெரியவனாக நினைத்துக் கொண்டிருப்பவனை மற்றவர்கள் மதிப்பில் குறைந்தவனாகச்செய்கிறான்.

—ஹஜ்ரத் உமார்



புத்தர் காலத்தில் வாழ்ந்த

# ஒரு பெண் துறவி.

[மயிலை, சீனி, வேங்கடசாமி]

இராசகிருகம் என்னும் நகரத்தை அரசாண்ட அரசனது மந்திரிக்கு ஒரு பெண் குழந்தை பிறந்தது. அக் குழந்தைக்குப் பத்திரை எனப்பெயரிட்டுப் பெற்றோர் சீராட்டிப்பாராட்டி வளர்த்தனர். இவ்வாறு வளர்ந்த அப்பெண்மகவு பெரியதாகி மணம் செய்யத்தக்க வயதினையடைந்தது. ஒருநாள் இப்பெண் தன்மாளிகையின் மேற்புறத்தில் உலாவியபோது, தெருவழியே கட்டழகுமிக்க காளையொருவனை அரசனது சேவகர் கொலைக் களத்துக்கு அழைத்துக்கொண்டு போவதைக்கண்டாள். கண்டதும்அக்காளையின் மேல்காதல்கொண்டாள். அவன அரசனது புரோகிதன்மகன். வழிப்பறி செய்த குற்றத்திற்காகக் கொலைத்தண்டனை அடையப்பெற்றுக்கொலைக்களத்திற்கு அழைத்தேகப்பட்டான். இக்குற்றவாளியின்மேல் காதல் கொண்டபத்திரை, 'அவனையே மணம்புரிவேன்; அன்றேல் உயிர் விடுவேன்' என்று பிடிவாதம் செய்தாள், இதனையறிந்த இவள் தந்தை கொலையாளருக்குக் கைக்கூலி கொடுத்து அவனை மீட்டுக்கொண்டுவந்து நீராட்டி ஆடையணிகளை அணிவித்துப் பத்திரையை அவனுக்கு மணம் செய்வித்தான்:

மணமக்கள் இருவரும் இன்பமாக வாழும் காலத்தில் ஒருநாள் ஊடல் நிகழ்ச்சியின்போது பத்திரை தன் கணவனைப்பார்த்து 'முன்பு கள்வன் அல்லனோ? எனக்கூறினாள், அவன் அவள் தன்னை இகழ்ந்ததாகக் கருதி மிக்க சினங்கொண்டான், ஆயினும், அதனை அப்போது வெளியிற்காட்டாமல் அடக்கிக்கொண்டான்.

பின்னர், ஒருநாள் அவன் பத்திரையை அழைத்து அவளிடம், தன் உயிரைக்காப்பாற்றிய தெய்வத்தை வழிபடும்பொருட்டு அருகிலிருக்கும் மலையுச்சிக்குப் போக விரும்புவதாகவும், அவளையும் உடன் வரும்படியாகவும் கூறினான். அவளும் இசைய இருவரும் மலையுச்சிக்குச் சென்றனர். மலையுச்சியினை அடைந்தவுடன், அக்கொடியோன் அவளைச்சினந்து நோக்கி, அன்று நீ

என்னைக்கள்வனென்று கூறினையன்றோ? இன்று உன்னைக் கொல்லப்போகிறேன், நீ இறக்குமுன் உனது வழிபடுகடவுளை வணங்கிக்கொள்" என்றான். இதனைக்கேட்டுத் திடுக்கிட்ட அவள், "தற்கொல்லியை முற்கொல்லவேண்டும்" என்னும் முதுமொழியைச்சிந்தித்து, அவன் கட்டளைக்குப் கீழ்ப்படிபவள்போல நடித்து, "என் கணவனாகிய உன்னையன்றி எனக்கு வேறுதெய்வமேது? ஆதலின் உன்னையே நான் வலம்வந்து வணங்குவேன்" என்றுசொல்லி அவனை வலம் வருவதுபோல் பின்புறம் சென்று அவனை ஊக்கித்தள்ளினாள். இவ்வாறு அக்கொடியவன் மலையுச்சியினின்றும் வீழ்ந்து இறந்தான்,

இதன் பிறகு, பத்திரை உலகத்தைவெறுத்தவளாய், ஜைன மதத்தின் பிரிவாகிய நிகண்ட மதத்தில் சேர்ந்து துறவு பூண்டாள், அந்சமதக்கொள்கைப்படி' பத்திரையின் தலைமயிரைக் களைந்துவிட்டார்கள். ஆயினும் மீண்டும் தலையில் வளர்ந்து மயிர் சுருண்டு காணப்பட்டது; ஆகவே "சுருண்டமயிரினையுடையவள்" என்றும் பொருள்படும் "குண்டலகேசி" என்று அவளைக் கூறினர். இப்பெயரே பிற்காலத்தில் இவளுக்குப் பெரும்பாலும் வழங்கப்பட்டது, சில வேளைகளில் இவளது இயற்கைப் பெயரையும் காரணப்பெயரையும் ஒருங்குசேர்த்துப் "பத்திரா குண்டலகேசி" என்றும் சொல்வதுண்டு.

ஜைன மதத்திற் சேர்ந்த குண்டலகேசிஜைனர்களிடம் சமய சாத்திரங்களையும் தர்க்க நூல்களையும் கற்றுத்தேர்ந்து, சமயவாதம் செய்யப்புறப்பட்டு, சென்றவிடமெங்கும் நாவல்நட்டு, வாதப்போர் செய்து வெற்றி கொண்டு வாழ்ந்தாள். [வாதப்போர் செய்வோர் நாவல் மரக்கிளையை ஊர்நடுவில் நட்டு வாதுக்கழைப்பது அக்கால வழக்கம்.] இவ்வாறு நிகழுங்கால், ஒருநாள் ஓர் ஊரையடைந்து, அவ்வூர் நடுவில்மணலைக்குவித்து நாவற்கிளையைநட்டு, உணவு பெறுவதற்காக வீடுதோறும் சென்றாள். அவ்வமயம் புத்தர் தமது சீடர்களுடன் அவ்வூருக்கருகிலிருந்த ஒரு தோட்டத்தில் வந்து தங்கினார். அவரது சீடர்களில் சாரிபுத்தர் என்பவர் உணவுக்காக அவ்வூருக்குச்சென்றார். சென்றவர் அங்கு நாவல் நட்டிருப்பதைக் கண்ணுற்று, அதன் காரணத்தை அங்கிருந்தவர்களால் அறிந்து, அங்கிருந்த சிறுவர்களை



# துறவி கவனிக்கவேண்டியவை.

(எத்தனையோ முயற்சிசெய்தும் புலன்களை அடக்கமுடியவில்லையென முறையிட்ட ஓர் சீடனுக்கு பரமஹம்ஸதேவரின் ஞானக்குழந்தையாகப் போற்றப்பட்ட பிரம்மானந்தசுவாமிகள் அருளியது)

"நான் காமத்தை வெல்லுவேன், கோபத்தைக் கொல்லுவேன், லோபத்தை விரட்டுவேன்," என்ற முறையில் வீம்பும் வீரமும் பேசிக்கொண்டு நீ புலனை அடக்க முயற்சித்தால், ஒரு நாளும் அவற்றை வெல்ல முடியாது. அதைவிட்டு, நீ கடவுளின் மீது மனத்தைச்செலுத்தித் தியானம் செய்வாயானால், புலன்கள் தாமாகவே அடங்கிவிடும்; நீ அதற்காகச் சிரமப்பட வேண்டிய அவசியம் இராது; "கிழக்குநோக்கி எவ்வளவு முன்னேறிச்செல்

முற்பக்கத்தொடர்

அழைத்து, அக்கிளையினைப் பிடுங்கி எறியும்படி கூறினார். அவர்களும் அவ்வாறே செய்தனர்.

பின்னர், உணவு கொள்ளச்சென்ற குண்டலகேசி மீண்டும் திரும்பி வந்தபோது, தான் நட்ட நாவல் வீழ்த்தப்பட்டிருப்பதைக்கண்டு, அதனை வீழ்த்தியவர் அருகிலிருந்த சாரிபுத்தர் என்பதையறிந்து, அவ்வூர்ப்பெரியோரை அழைத்து, அவை கூட்டச்செய்து, சாரிபுத்தருடன் வாதம்செய்யத்தொடங்கினாள். நெடுநேரம் நடைபெற்ற வாதத்தில் குண்டலகேசி வினவிய வினவுக்கெல்லாம் சாரிபுத்தர் விடையளித்தார். பின்னர் சாரிபுத்தர்வினவிய விடைகளுக்குக் குண்டலகேசி விடையிறுக்கத் தெரியாமல் தான் தோற்றதாகச் சொல்லி, அவன்காலில் விழுந்துவணங்கி அவரை அடைக்கலம் புகுந்தாள். சாரிபுத்தர் குண்டலகேசியை பார்த்து, "என்னிடம் அடைக்கலம் புகாதே, எனது குரு புத்த பகவானிடம் அடைக்கலம் புகுவாயாக" என்று சொல்லி அவளை அழைத்துச் சென்று புத்தரைவணங்கச்செய்தார். புத்தர் அவளுக்கு உபதேசம் செய்து, அவளைப்பௌத்த மதத்தில் சேர்த்தார். இதுவே குண்டலகேசி என்னும் தேரியின் வரலாறு:

[பாளி மொழியில்எழுதப்பட்ட நூல்களாகிய 'தேரிகாதை' 'தம்மபாதா முதலானவற்றிலடங்கிய வரலாற்றைத் தழுவியது இக்கட்டுரை)

வாயோ. அவ்வளவுக் கவ்வளவு நீ மேற்கிலிருந்துதானே விலகி வந்துவிடுவாய்; அதற்காகத்தனியாக முயற்சிசெய்ய வேண்டியதில்லை. என்று ஸ்ரீராமகிருஷ்ணர் சொல்வது வழக்கம்; எனவே இந்த நேர்வழியை நீ பற்றிச்செல்; கடவுளை நாடிப்பிரார்த்தனை செய்.

உன்னுடைய சாதனையின் ஆரம்பகாலத்தில், கொஞ்சங்கொஞ்சமாக, உன் தியான ஜபத்தை அதிகப்படுத்திக்கொண்டேபோக வேண்டும். ஆனால், திடீரென்று, ஒருகணநேரத்து உற்சாகத்தால் உனது தியான ஜபத்தை ஒரே சமயத்தில் மிகுதியாக அதிகப்படுத்திவிடாதே. இந்த விதியை நீ மீறிநடத்தல் கூடாதென நான் எச்சரிக்கை செய்கிறேன்; நடந்தால் அதிக துன்பத்துக்கு ஆளாவாய். எந்த ஒரு காரியத்துக்கும், அதன் பின்னிகழ்ச்சியாய் உண்டாகக்கூடியதான எதிர்த்தாக்கம் ஒன்றுண்டு. திடீரென்று ஒரே சமயத்தில் தியானத்தை மிகுதியாக அதிகப்படுத்துவதனால் உண்டாகக்கூடிய எதிர்த்தாக்கமோ மிகக்கடுமையாகவும் விபரீதமாகவும் இருக்கும்; அதனை நீ தாங்கமுடியாது; அதன்பயனாக மிகப்பயங்கரமான மனத்தளர்ச்சியை நீ அடையக்கூடும். அதற்குப்பிறகு தியானஜபம் செய்வதில் உனக்கு விருப்பம் உண்டாகாது.

இன்னும் ஒன்று கவனிக்கவேண்டும்; தங்கள் வீடுவாசல் ஆகிய எல்லாவற்றையும் விட்டு விட்டுத் துறவற வாழ்க்கையைத் தழுவியுள்ளவர்களுக்கு, பிறரைத்தமக்குக் கீழ்ப்படுத்தி அவர்கள் மீது தம்முடைய ஆதிக்கத்தைச் செலுத்த இச்சிப்பதோ முற்றிலும் தகாத காரியம். அப்படிப்பட்ட எண்ணம் துறவியை மறுபடியும் பந்தத்துக்கு உட்படுத்த மூலகாரணமாகும். ஆகையால் இப்படுகுழியில் விழாதவண்ணம் நீ சாக்கிரதையாக இருக்க வேண்டும். நீ எத்தொழிலைச் செய்தாலும் எப்பொருளைப்பார்த்தாலும் அது கடவுளினுடையதாகவே காண்பாயாக; உன்னை அக்கடவுளின் கையில் உள்ள ஓர் கருவியாகக்கருதிக்கொள். "அகங்கார விமூடாத்மா கர்த்தாஹமிதி மன்யதே" நான் என்ற அகங்காரத்தினால் மயங்கியவனாய் மனிதன் தானே கர்த்தாவென்று எண்ணுகிறான், என்ற கீதாவாக்கியத்தை எப்போதும் எண்ணியிரு.



# புத்தரோடு புகுந்த புத்துயிர்.

புத்ததாஸன்

அன்று என்ன குதூகலம்! நகர வாசிகள் எல்லோரும் திரள் திரளாய் வீதிகளில் நடமாடிக்கொண்டிருந்தனர். மாடமாளிகைகளிலிருந்து ஆடவரும் பெண்டிரும் இமை கொட்டாது ஜனத்திரள் செறிந்த வீதிகளைப் பார்த்த வண்ணமாய் இருந்தனர். எல்லோரது முகத்திலும் ஏதோ புதுமையொன்றைக் காணக் காத்திருக்கும் வியப்புக்குறி! அவ்வூர் அரசனும் அவனது அமைச்சர்களும் குழாமாக நகரவாசலில் புஷ்பமும் கையுமாகக் காத்திருந்தனர். இவர்கள் எல்லோரும் எந்தப்புண்ணியபுருஷரை வரவேற்கக்காத்திருக்கின்றனரோ!

காலையின் மிகப்பொழுது கழிந்தாகிவிட்டது. இளஞாயிறு தன் வெப்பத்தைச் சிறிது சிறிதாகப் பெருக விட்டுவந்தான். அம் மாடவீதியின் ஒரு கோடியில் ரம்மியமான ஓர் அரண்மனை; வான ........

---

முற்பக்கத்தொடர்

பொய்பேசுதல் இன்னொரு பெரியபாவம். குடிகாரனையும் வேசியர் வீடுசெல்பவனையும் கூட ஒருவேளை நம்பலாம்; ஆனால் பொய்பேசுபவனை ஒருக்காலும் நம்பமுடியாது. உலகிலுள்ள பாவங்கள் அனைத்திலும் மிகக்கொடியது அதுவே.

ஒரு துறவி இல்லறத்தார் கொடுக்கும் உதவியைமட்டும் ஏற்றுக்கொண்டு, அதற்குப்பதிலாக ஆத்மசாதனையில்தான் ஈடுபடாதிருந்தால், அவர் சத்தியநெறியில் நிற்பவர் ஆகார். இல்லறத்தார் அத்துறவிக்கு உணவும் பொருளும் கொடுத்துதவுகின்றனர். எதற்காக உலகவாழ்வுக்குற்ற மற்ற தொழில்கள் எல்லாவற்றினின்றும் தன்னைவிலக்கிக்கொண்டு துறவி எப்போதும் தன்னுடைய ஆத்மசாதனையிலேயே ஈடுபட்டிருப்பாரென்று அவர்கள் எதிர்பார்க்கின்றனர். ஆகையால் சாதனையில் ஈடுபடாமல் அவர்கள் கொடுப்பதை ஏற்பது தவறாகும்; அவ்வித நடையுனக்கு நஷ்டத்தையே விளைவிக்கும்.

ளர்விய அதன் மாடிகளில் ஒரு சிறு ஜன்னல் வழியாக இரண்டு சிறு அழகுபூத்த வதனங்கள் காணப்பட்டன. ஓர் இளம் பெண்மணியும் அவள் அழகே வழிந்து செழித்து வடிவெடுத்தாற்போன்ற ஒரு சிறு ஆண்குழந்தையும் அந்த ஜன்னலருகே ஓயாதுவீதி வழியாகக் கண்ணோட்டம் வைத்துக்கொண்டிருந்தனர்.

"அம்மா, அதோ தெருவில்வருகிறார்களே; அவர்களில் யாரம்மா என் தந்தை!" என்று அந்தப்பச்சிளங்குழந்தை அப்போது தெரு வழியாக வந்துகொண்டிருந்த ஒரு "ஜனக்குழுவைச் சுட்டிக்காட்டிக் கேட்டது. ஆஹா! அக்கூட்டத்தின் நடுவே மெதுவாய் நடந்துசென்ற புருஷரின் வதனத்தைஎன்னென்று வர்ணிப்பது நகரம முழுவதும் ஒரு ஆயிரங்கண்களும் ஒருகண்ணாகமாறி அவரை நோக்கலாயிற்று. என்ன கம்பீரம்! அதோடு என்னசாந்தம்! இத்திருக்காட்சியில் லயித்து, தன் வசமிழந்துநின்ற அப்பெண்மணியின் செவிகளில் அச்சிறுவன் கேட்டகேள்வி புகுந்ததோ என்னவோ! அப்புருஷர் அணிந்திருந்த மஞ்சள்நிற ஆடைகாற்றில் வீசிக்கொண்டேசென்று அம்மங்கையின்கண்களை மயக்கியது காமாலையுற்ற நோயினன் தான் காண்பதையெல்லாம் மஞ்சள்நிறமாகக் காண்பானும். அம் மங்கையின் கண்களும் புனிதமஞ்சள் நிறத்தையே எங்கும் காணலானாள். அவள் கண்ணெதிரே ஜனத்திரள் எங்கே! அரசனும் — அமைச்சரும் எங்கே! அவள் காதுகளில் சிறுவனின் மழலைச் சொல் எங்கே, கூட்டத்தின் ஆரவாரம் எங்கே!

அரசனும் அமைச்சரும் புடைசூழ ஜனங்கள் நல்வாவு கோஷிக்க அப்புண்ய புருஷர் கம்பீரமாக அரண்மனையை நோக்கி நடந்து வந்தார். "அம்மா அவர்களுள் யாரம்மா என் தந்தையார்?" என்று மீண்டும் அச்சிறுவன் தன் தாயாரைநோக்கிக் கேட்டான். என்ன புதுமை! அக் கேள்வி அவள் உள்ளத்தை ஊடுருவிச்சென்றது. கண்களில் நீர் ததும்பச் சிறுவனை வாரியெடுத்து சொல் தடுமாற, மெய் சிலிர்ப்ப அப்பெண் அணங்கு சொல்லுவாள். "அப்பா அதோ சிங்கத்தைப்போல் நடை நடந்து செல்கிறாரே அவர்தான் உன் தந்தை."



ஆம் சிங்கத்தைப்போல் நடைநடந்துசெல்பவர்தான் நம் புத்ததேவர். அவரை ஈன்றெடுத்த நம் இந்தியநாட்டின் பெருமை தானென்னே! என்னே!!! உள் பொருளின் நாட்டம் என்ற ஆண்மை மங்கி, ஆசாரப்பூசல் என்றபெண்மை தலையோங்கியிருந்தகாலத்தில் இந்தியரை எழுப்பி அவர்களுக்குப் புத்துயிர் அளித்தவர் புத்தர் என்பது சிறு குழந்தைக்கும் தெரிந்த விஷயமே. அவர் தம் சீடர்களை உலகெங்கும் சென்று ஆன்மவீரத்தை மக்களிடம் புகுத்தி வரும்படி ஏவியபோது சொன்ன வார்த்தைகள் என்ன மணிகள்! "ஓ பிக்ஷுக்களே, பலவேறு விலங்குகள்வாழும் காட்டினிடத்துத் தனியாகவும் பயமின்றியும் கம்பீரமாகவும் நடந்து செல்லும் சிங்கத்தைப் போல் என் ஞான பொக்கிஷத்தை ஏந்திச் செல்லுங்கள். அஞ்சல்! அஞ்சல்! பின்னோக்காது முன் செல்லுங்கள்".

பல்லாயிரம் ஆண்டுகளுக்குப்பின், சென்ற பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஈற்றில் இதே சிம்ஹ கர்ச்சனை மீண்டும் நாடெங்கும் முழங்கலாயிற்று, ஆம் புத்தருடைய வீரகர்ஜனை ஒழியாது. இந்தியரைமீண்டும் மீண்டும் உயிர்ப்பிக்கப் புத்தருண்டு, விவேகானந்தருண்டு இவர்கள் என்றும்அழியாத இந்தியவீரர்கள் இன்று நாம் நிலைகுலைந்து திக்குத்தெரியாமல் உழல்கின்ற தறுவாயில் நமது வீரத்தலைவர் புத்தர் பிரானை ஸ்மரிப்போம். அவர் நமக்கு ஈந்தருளிய ஆண்மையை நழுவவொட்டாது பேணிவளர்ப்போம் சமயப்பூசல் ஆசாரப்பூசல் இவற்றை நஞ்செனத்துறந்து தூயவாழ்வு தூயநோக்கு உள்ளொளி என்ற புத்தர் அருமணிகளைக்கடைப்பிடித்து ஒழுகுவோம்.

---

வள்ளுவர் தந்த திருமறையைத்—தமிழ்
மாதின் இனிய உயிர்நிலையை
உள்ளம் தெளிவுறப் போற்றுவமே—என்றும்
உத்தமராகி ஒழுகுவமே.

—தேசிகவிநாயகம்பிள்ளை

# பெரியோருரைகளும் நமது மறதியும்.

## (அறிஞர் வாஸ்வானியின் மொழிகள்.)

தென்னாபிரிக்கா டர்பன் திரு ச, மு பிள்ளை அவர்கள்

இப்பிரபஞ்சம் தோன்றிய நாள்தொட்டு இன்றளவும் உலகத்தில் அவதரித்த ஞானிகளும், மகான்களும், தீர்க்கதரிசிகளும் உபதேசித்த பொன்னுரைகளனைத்தும் மண்ணாகிப்போய் விட்டனவா? அல்லது அப்பொற்களஞ்சியத்தை மக்கள் பயன்படுத்திக்கொள்ளாமல் துர்ப்பாக்கியவான்களாயினரா? மகான்கள் உபதேசத்தை நாம் கேட்டு அனுஷ்டித்துப் பார்த்தபின் பலனொன்றுமில்லையென்று கண்டுவிட்டோமா? அல்லது மகான்கள் உபதேசத்தைக் காதுகொடுத்துக் கேட்காமல் அனாதரவு செய்த பாவிகளானோமா?

மகான்கள் சத்தியத்தை நமக்கு உபதேசம் செய்தார்கள். சத்தியத்திற்கு பிரசாரம்தேவையில்லை. அதைப்பிரசாரத்தினால் பிரபல்யப்படுத்தவேண்டிய அவசியமில்லை. சத்தியமென்னும் ஜீவவித்து தானாகவே ஊன்றி வளரக்கூடிய சக்தியுடையதாகும். இந்த உலகத்தில் நாம் சந்தை இரைச்சல் போடுகிறோம். அந்த கோஷத்தில் மகான்களுடைய குரலோசை மூழ்கிப்போய்விட்டது

ஆனால், சத்தியம் நசித்துப் போகக்கூடியதல்ல. அது தானாகவே தலை நிமிர்ந்து நிற்கவல்லது. ஆள் கூட்டத்தின் அளவைக் கொண்டு ஒரு மதத்தின் உயர்வு தாழ்வை நிர்ணயம்செய்யக்கூடாதென்று நான் கருதுகிறேன். எவ்வளவு பேர்கள் அந்தமதத்தை பக்தி சிரத்தையுடன், அனுஷ்டிக்கின்றனர் என்பதைத்தான்பார்க்கவேண்டும். மதத்திற்கு சக்தியும் ஜீவனும் கொடுப்பவர்கள் அப்பேர்ப்பட்டவர்கள்தான்,

இந்த உலகத்தில் சர்வதேசங்களும் யுத்தபீதியினால் அவதிப்படுகின்றன. நிகழும் காலமானது உலகத்திற்கு இருள் சூழ்ந்த இரவுகாலமாகும். இருள்கௌவிய இந்த சந்தர்ப்பத்தில் உலகத்திலுள்ள மக்களனைவரும் கீழ்நாடுகள் இருக்கும் திசையை நோக்கி நின்று இருளைப்போக்க ஓர் ஒளி வருமாவெனக் காத்திருக்கின்றனர். பலதடவைகளில் ஞானசூரியன் கீழ்த்திசையிலல்லவா உதித்திருக்கின்றான். அதுபோல் மீண்டும்உதயமாகாதாவென்று மக்கள்ஆவல் கொண்ட முகத்துடன் நோக்குகின்றனர். ஆம்! உலகத்தில் நாகரிகம் நிலைக்கவேண்டுமானால் ஒரு தெய்வீக சக்தியொன்று தோன்றித்தானாகவேண்டும்.

அகிம்சா தர்மத்தை உபதேசிக்கும் வான்புகழ்வீரர்கள்தான் இந்த உலகத்தைக் காக்க வந்த தெய்வங்களென்று மக்கள் நம்பிக்கை கொண்டிருக்கின்றனர், நாமும் அவ்வாறே நம்பிக்கைகொண்டிருக்கிறோம். அந்த வீரர்கள் இந்தஉலகத்தைத் திருத்தியமைப்பரென்று நாம் நிச்சயமாக நம்பிக்கை கொண்டிருக்கிறோம் உலகமெங்கும் அகிம்சை தழைக்கவேண்டும்; மக்கள் மனதிலே ஜனங்களுக்குத் தொண்டாற்றும் ஆசை ஊறவேண்டும்.

இந்த உலகத்தில் ஒரு சீதோஷ்ண பிரதேசத்தில் வசிக்கும் ஜனங்கள் மாத்திரம் ஒன்று கூடிக்கொண்டு நாமனைவரும் சகோதரர்கள் என்று சொல்லிக்கொள்கின்றனர். மற்ற சீதோஷ்ணப்பிரதேசங்களில் வசிக்கும் மக்களும் கடவுளின் குழந்தைகளல்லவா? அவர்களும் சகோதரர் அல்லவா?

நிறம், ஜாதி, மதம் என்ற எல்லை வகுத்துக்கொண்டு அந்த எல்லைக்குட்பட்டவர்கள் மாத்திரம் சகோதரர்கள் என்று சொல்லிக்கொள்ளும் மனப்பான்மை மக்களுக்கு வந்ததன் காரணமென்ன? ஆதிகாலத்தில் புத்தபிரான் சொன்ன பொன்னுரைகள் மக்கள் மனதை விட்டகன்று விட்டன.

ஜீவாத்மாக்களனைத்தும் ஒரு பரமாத்மாவின் திருவடிகளிலேதான் ஐக்கியமாகின்றனவென்று ஏசுநாதர் உபதேசித்ததை மக்கள்மறந்துவிட்டனர், ஆகவேதான் உலகத்தில் குறுகிய நோக்கம் பெருகிவிட்டது.

நாளுக்குநாள் நல்ல நாகரிகம் பாதாளத்தில் மூழ்கிமறைந்துகொண்டே வருகிறது. “ஐரோப்பா கண்டத்து மக்கள் மீண்டும் மிருக பிராயம் வேண்டி பாடுபடுகின்றனர்:” என்று ஞானியார் ஹெர்பர்ட் ஸ்பென்ஸர் கூறியது எனக்கு ஞாபகம் வருகிறது. இன்று உலகத்தில் பல விடங்களில் பிளவுகள் தோன்றியிருக்கின்றன; ரத்தம் கசிந்தோடுகின்றது; இவற்றிற்குக்காரணமென்ன?

# நான்கு தெய்வங்கள்.

சரஸன்

தெய்வங்கள் பலவகைச் சமயத்தாருக்கும் வெவ்வேறிருப்பினும் எல்லோரும் ஒரே வகையிற் போற்றக்கூடிய தெய்வங்கள் நான்கு உண்டு. அத்தெய்வங்களாவன. தாய், தந்தை, ஆசிரியன் விருந்தினன்.

இத்தெய்வங்கள் நம் கண்முன் நடமாடும் பிரத்தியட்ச உருவங்கள். இவர்களைப்போற்றிப்பணிந்தாலே ஒருமனிதன் கிருதார்த்தனுவதற்குப்போதுமானது என்பது சித்தாந்தம். வேறுதெய்வங்களைத் தொழவேண்டிய அவசியமில்லை என்று கூறப்படுகிறது.

---

முற்பக்கத்தொடர்

உலகமக்களனைவரும் ஓர் குலத்தில் பிறந்தவரென்னும் அன்னியோன்ய பாவம் மக்கள் மனதிலே உதிக்காமைதான்.

உலகத்தில்எல்லா தேசங்களிலும் பள்ளிக்கூடங்களும், சர்வகலாசாலைகளும், கல்விக்கழகங்களும் ஏதேஷ்டமாகஇருக்கின்றன அப்பேர்ப்பட்ட இடங்களிலே குழந்தைகளுக்கும், வாலிபர்களுக்கும் பதார்த்தகுண ஆராய்ச்சி ஞானம் போதிக்கப் படுகிறது. ஆத்ம ஞானபயிற்சி அளிக்கப்படுவதில்லை. உலகத்தில் சர்வஜனங்களும் சுகமாக வாழவேண்டுமென்னும் அனுதாபம் மக்கள்மனதிலே தோன்ற வேண்டும். அன்பு தவழும் மனதிலே தான் அப்பேர்ப்பட்ட அனுதாபம் தோன்றும்

புத்தபிரான் உலகத்திற்கு உபதேசித்த உரை என்ன? இந்த ஜகத்திலுள்ள சர்வஜீவன்களிடமும் அன்புடனிரு; என்று உபதேசித்தார். பத்து குழந்தைகளைப் பெற்றெடுத்த தாய் ஒருதிக்கு ஒன்பது குழந்தைகள் மாண்டு போகின்றன. பத்தாவது குழந்தை தான் பாக்கி இருக்கிறது. அந்த ஒரு குழந்தைதான் பகவான் மிச்சமாகவிட்ட பிரசாதம். அப்பேர்ப்பட்ட ஒரு குழந்தையிடம் அந்தத் தாய் எவ்வளவு பட்சம் காட்டுவாளோ, அவ்வளவுபட்சத்தை நாம் சர்வஜீவன்களிடமும் காட்டவேண்டுமென்று புத்தபிரான் உபதேசித்தார்,



ஆனால் நம்மில் எத்தனைபேர் இந்தப்பிரத்தியட்சத் தெய்வங்களை வழிபடுகின்றோம். என்று சிந்தித்துப்பார்த்தால்வெட்கமாய் இருக்கிறது.

முதலில் தாயை எடுத்துக்கொள்வோம். நம்மைக்கருவிலே சுமந்து பெற்று வளர்த்து நம் சுகதுக்கங்களை தனதாய்ப்பாவித்து நம்மை முன்னுக்குக்கொண்டுவந்தவள் தாய். தாயின் அருமை எப்போது தெரிகிறது? ஒரு குழந்தைக்குத்தாய் இறந்து விடுகிறாள் என்று வைத்துக் கொள்வோம். அதைப் பார்ப்பவர்கள் "ஐயோ பாவம்! தாயில்லாக்குழந்தை" என்று அநுதாபப் படுவதைக்கேட்டிருக்கிறோம்,

அதே குழந்தைக்குத் தாயிருந்து தந்தையில்லாவிடில் தந்தையில்லாக்குழந்தையென்று யாரும் அனுதாபத்துடன் கூறக் கேட்டதில்லை. ஏன்? குழந்தைக்குத் தாய்தான் தாயாக இருந்து போற்றிவளர்க்கமுடியும். தந்தை ஒருபோதும் தாயாகமுடியாது ஆனால் அப்படிப்பட்ட தாயின் உன்னதமகிமையை வயது வந்த நம்மில் பலர் மறந்துவிடுகிறோம். தாயைத்தாயாகப் பாவியாமல் கேவலம் பணியாளாகப்பாவித்து வாழ்த்துகிறோம். பலஇடங்களில் தாயை எப்படிப் போற்றவேண்டுமோ அதேமுறையில் இல்லாளைமட்டும் போற்றிவருவதையும், பெற்றதாயைப் புறக்கணிப்பதையும் கண்கூடாகப்பார்த்திருக்கிறோம். பெற்றதாயைமறப்பவனுக்கு, பெற்றதாயைபழிப்பவனுக்கு, பெற்றதாயைப்புறக்கணிப்பவனுக்கு விமோசனமே கிடையாது. தாயே நம் முதற்கடவுள்.

இரண்டாவது தெய்வம் தந்தை நம்மை நல்லமனிதனுக்குவதில் நம்தாய்க்கு உறுதுணையாய் இருந்துபலவிதங்களிலும் உதவிபுரிபவர் தந்தை. அவரால் ஆளாக்கப்பட்ட நாம் அவரைவிட மேதையென்று அகங்காரங்கொண்டு அவரைப்பழிப்பதும் அவமதிப்பதும் மதியீனம். இக்காலத்துக்கல்விமுறை இளைஞர்மனதில் அம்மாதிரி ஒரு உணர்ச்சியை எழுப்பிவிட்டிருக்கிறது. இது வருந்தத்தக்கது. இந்நிலைமாறவேண்டும்.

மூன்றாவதாக நம் அறிவைவளர்க்கும் ஆசிரியர் மூன்றாவது கடவுளாகிறார். பழைய காலத்திலே ஆசிரியருக்கு உயர்ந்த

உயர்ந்த கௌரவமும் அந்தஸ்தும் மதிப்பும் இருந்து வந்தது. இக்காலத்திலேயோ தலைகீழாகப்போய்விட்டது. பலபள்ளிகளில் ஆசிரியர்களுக்கு மாணவர்களால் கேலிப்பெயர்கள் வழங்கப்படுகின்றன. "அடேய்! ஆந்தைக் கண் வருகிறதடா" என்றும் "இன்று கிளிமூக்கு வகுப்புக்கு வரவில்லையடா" என்றும் இம்மாதிரிமாணவர்கள் கூறுவதைக் கேட்கிறோம். குழந்தைகளையும் இளைஞர்களையும் உன்னதநிலைக்குக் கொண்டுவருவதில் பெரும்பங்கு ஆசிரியருடையது. அஞ்ஞானத்தைப்போக்கி ஞானத்தை ஊட்டுபவர் ஆசிரியர். அப்பேர்ப்பட்ட ஆசிரியரை நாம் பூஜிக்கவேண்டியதுபோக, அவரைக்கேலிச்சொற்களால் பரிகசிப்பதைபோன்றகேவலமான செயல்களை என்னவென்று சொல்வது?

நான்காவது தெய்வம் விருந்தாளி இந்நாளில் விருந்தாளி என்றாலே பகீர் என்கிறது. வாஸ்தவம் உணவுப் பொருள்கள் பங்கீடுமுறைப்படி வழங்கப்படும் இக்காலத்தில், நம் குடும்பங்களில் உள்ளவர்களுக்கே எட்டும் எட்டாமல் இருக்கும்போது விருந்தாளி என்று வேறுஒருவர் வந்துவிட்டால் எரிச்சலுண்டாகத்தான் செய்கிறது. "விருந்தோம்பல்" முறைதமிழனின் பண்டைய சொத்து. இன்று நேற்று ஏற்பட்டதல்ல. ஏதோநம் சக்திக்கு எட்டியபடியும் பாத்திரத்தின் தகுதிக்குத் தக்கபடியும் அதிதிகளை உபசரிப்பதுதான் உத்தமம். அதிதிகளை உபசரித்த பலமகான்களின் வரலாறுகளை நாம் அறிந்திருக்கிறோம். வறுமையிலுங்கூடமனச் சோர்வு கொள்ளலாம். அதிதிபூஜை நடத்திய உத்தமர்கள் வழிவந்துள்ள நாம் அந்தப்பரம்பரைக்குக் களங்கம் ஏற்படுத்துவது உசிதமா என்று யோசிக்கவேண்டும்.

எனவே, மேற்படி நால்வருள் நம் தெய்வம் அடங்கியிருக்கும்போது அவர்களைப்போற்றிப்பூசித்தலே நம் விமோசனத்திற்கு போதுமானது. வேறு தெய்வங்களைப் பற்றிச் சிந்திக்கவும் தேவையில்லை.





# ஸ்ரீபுத்தர் அருள் வாக்கு.

"அவன் என்னை வைதான், அடித்தான், வென்றான், களவாடினான்" என்னும் இவ் வெண்ணங்கள் குடிகொள்ளப் பெற்றவர் ஒருபோதும் தம் சினத்தை ஆற்றமுடியாது. "அவன் என்னை வைதான் அடித்தான், வென்றான், களவாடினான்" என்னும்இவ் வெண்ணங்கள் தம்மை அணுகவிடாதவரே சினத்தை ஆற்றவல்லார்.

இவ்வுலகத்தில் ஒருநாளும் பகையைப் பகையினால் ஒடுக்க முடியாது. அதை அன்பினால்தான் தணிச்தல் இயலும். தொன்றுதொட்டு வரும் அழிவற்ற நியதி இதுவே.

தளர்ந்த மரத்தைப் புயற்காற்றுவேரறமண்மீதேசாய்ப்பதுபோல் இந்திரிய சுகமே வாழ்க்கையின் நோக்கமாகக் கொண்டவனையும், ஐம்புலனையும் அடக்கி ஆளாமல் மிதமிஞ்சிய உணவும் சோம்பலும் விரும்பி ஆற்றல்அனைத்தையும் வீண் செய்தவனையும் மாரன் எளிதில் அடிமை கொள்ளுவான். கற்பாறையைப் புயற்காற்று எளிதில் அசைக்கமுடியாது. அதுபோல இந்திரியசுகமே வாழ்க்கையின் நோக்கமாகக் கொள்ளாதவனையும், ஐம்புலனுக்கு அரணிட்டு மிதஉணவும் மேற்கொண்டு ஆற்றல் அனைத்தையும் வீணாக்காமல் பாதுகாத்தவனையும் மாரன்வெல்லமுடியாது.

பாவம் செய்பவன் இகபரம் இரண்டிலும் சோகம் அடைவான். தான்செய்த தீவினையைச் சிந்தித்து அவன் துக்கப்பட்டு நைவான்.

ஒருவன் வேதநூல்களில் ஒருசிறிதே கற்றிருக்கலாம். எனினும் அந்நூல்கள் கூறும் நெறியை ஐயமற உணர்ந்து அதைப் பின்பற்றுவானாயின், சினத்தையும், பகைமையையும் அறிவின்மையையும் அறவே ஒழித்துத் தர்மம் இன்னதெனச் சரிவர உணர்வானாயின், மண்ணிலும் வானுலகத்திலும் உள்ள எப்பொருள் மீதும் பற்றுவையாமல் கள்ளமற்ற உள்ளம் கொள்வானாயின் அவன் பிக்ஷுகளின் திருக்கூடங்களில் இடம்பெறுவான்.

மாயை என்ற உறக்கத்திலிருந்து விழித்திருத்தலே சாவற்ற அமரநிலைக்கு வழியாகும். அஜாக்ரதை மரணத்திற்கு மார்க்கம், விழிப்பெய்தினோர் மடிவதில்லை. அஜாக்ரதை கொண்டோர் உயிர்வாழ்ந்தும் இறந்தவரேயாவர்,

மாயையென்னும் தூக்கத்திலிருந்து விழிப்பெய்தி சர்வஜாக்கிரதையுடன் எந்நாளும் கண்ணயராமல் குற்றமற்ற பெருஞ் செயல் புரிந்துதன்னை அடக்கித் தர்மவாழ்வில் ஈடுபட்டவனுடைய கீர்த்தி நாளுக்குநாள் பெருகும். அஞ்ஞானமும் மடமையுங் கொண்டவர்கள் விழிப்பற்றவாழ்வைப் பின்பற்றுவார்கள். ஆனால் ஞானியோ, தான் எய்திய விழிப்பை பெறற்கரிய பெருஞ் செல்வமாகக்கருதி அதிஜாக்கிரதையாகப் பாதுகாப்பான்.

தன்னிலும் வலிகுறைந்த குதிரையை மீறித்திடும் மிகுந்த அசுவம் முன்னேறுவது போல் விழிப்பும் ஜாக்கிரதையும் பூண்ட மெய்ஞ்ஞானி உன்மத்தரையும் உறங்குவாரையும் கடந்து முன் செல்லுகிறான்.

அம்புசெய்யுந் தொழிலாளி தான் இழைக்கும் பாணங்களை கோணலின்றி நேர்படுத்துவது போல, ஞானியும் தன்மனத்தை நோக்கி ஒருமுகப்படுத்துகின்றான்,

கட்டுக்கடங்காமல் இச்சித்த பொருள் மீதெல்லாம் தாவியலையும் மனத்தை அடக்கியாளுவது நல்லது, அவ்வாறுமனத்தை அடக்கியாளுவது ஆனந்தம் பெறச்சாதகமாகும். இந்தமனம் எளிதில் ஆய்ந்தறியக்கூடாதது, அதி சூக்குமமானது. விரும்பிய பொருள்மேலெல்லாம் தாவி அலைவது, ஆகவே அறிவுடையோன் தன் சிந்தைக்கு நல்ல காவலிடவேண்டும். அவ்வாறுகாவலிடுவது ஆனந்தம் பெறச்சாதகமாகும்.

மனத்தை அடக்கி ஒரு நியமத்தோடு செலுத்தினால் பெரும் நன்மைகள் பெறுவோம். அவற்றைவிடமேலான நன்மைகளைத் தாயோ தந்தையோ அல்லது மற்ற உறவினரோ கொடுக்கமுடியாது,

பிறருடைய குற்றங்குறைகளை ஒருவன் கவனிக்கக் கூடாது, தன் சொந்தப்பிழைகளையும் தான் சரிவரச் செய்யத் தவறிய காரியங்களையுமே அவன் சிந்தித்துச் செம்மை செய்யவேண்டும்!



என்று மணவாளமாமுனிவர் இரந்து கேட்கும் முறைசால அமைவுடையதாகும்.

"எம்பெருமானே! எழுகடல்மணலை அளவிடின் அதிகம் எனதிடர்ப்பிறவி, அத்தனை தரம் இறந்தேன். அப்பிறவிகள்தோறுங்கண்ட தொன்றில்லை. எனவைந்த சித்தமுடையவன் எவ்வாறிருப்பானெனில் தூயஉள்ளம் படைத்தவனாயிருப்பான். அத்தூயோன் நான்கு சாதனங்களையும் ஒரு வடிவாகப் பெறுகிறான், அவையாவன:- நித்திய, அநித்திய, வஸ்து, விவேகம் இது முதலாவது சாதனம். இரண்டாவது சாதனம் இக, உத்தர, அர்த்த. பல, போக, விராகம், மூன்றாவது சாதனம் சமாதி, சட்க, சம்பத்தி, நான்காவது சாதனம் முமூர்ச்சுத்துவம் [மோக்ஷஇச்சை)

இந்நான்கு சாதனங்களையும் ஒரு உடலாகக் கொண்டு காடு மலை, குகை, க்ஷேத்திரம் இவைகளெல்லாம் உண்மையைச்சொல்லவல்ல உத்தமர்கள் இருக்கின்றார்களா என்றும் அவாவினாலே அடியார் வேடந்தாங்கியவர்களைக் கண்டதும் யாரோ? எனக்கு இப்பிறவி வந்தவாறெங்ஙனம்? இப்பிறவி எதனால்தீரும்? எவர் தீர்க்க வல்லார்? என்னும் வினாக்களை எழுப்புவர். இவ்வாறு ஆராய்ந்து வினவியமணிவாசகரை

"மற்கட விலக்கு தன்னால் வழக்கெழு விழலின் மேவு(ம்)
நற்கனி கொள்ளவேண்டி நயந்து கல்லெறிவார் போல
சற்குரு உளரோ? என்று நாடுவார் தர்க்கமெல்லாம்"

என்று கடவுள் மாமுனிவர் கூறிப்போந்தனர்.

உலகம் துன்பமெனக்கண்டவர்களுக்குத் துன்பவிடுதலையைச் செய்யச் சற்குரு தரிசனம் வேண்டும். சற்குரு வினாலேயேசொல்லற்றுச்சும்மாயிருக்கும் சுகவாழ்வு உண்டாகும். குருவை மனமொழி மெய்களால் வாழ்த்தும் மாண்புவாய்ந்தவனே சீடனாகும். மேலும் நான்கு சாதனங்களையும் அமைவுறப்பெற்றவனே சற்சீடனாகும். அந்நான்கு சாதனங்களையும், சீடனிலக்கணங்களையும் ஆராய்வோமாக.

[தொடரும்

நானேயோ தவஞ்செய்தேன் சிவாயநம வெனப்பெற்றேன்
தேனாயின் னமுதமுமாய்த் தித்தித்துஞ் சிவபெருமான்
தானேவந் தென்னுள்ளம் புகுந்தடியேற் கருள்செய்தான்
ஊனாரு முயிர்வாழ்க்கை யொறுத்தன்றே வெறுத்திடவே-

# கண்டேன் இலங்கை

யோகி ஸ்ரீ சுத்தானந்தபாரதியார்

நலந்தரு திருக்க ளெல்லாம்
நல்கிடும் சிவமே கண்டேன்
நிலந்தரு திருக்கள் கண்டேன்
நெஞ்சுறும் செஞ்சொல் கேட்டேன்
நலங்கரும் ஆன்ம நேயம்
களிநகை புரியக் கண்டேன்
இலங்கையைக் கண்டேன் அன்பின்
இலக்கணம் கண்டு கொண்டேன் 1

காவலர் கடமை கண்டேன்
கலைவளர் கோவில் கண்டேன்
நாவலர் விதைத்த சைவம்
நாடெலாம் செழிக்கக் கண்டேன்
பூவலர் சோலை யெல்லாம்
புதுமணம் பரவக் கண்டேன்
சேவலும் கிளியும் உள்ளம்
சிலிர்த்தெனை அழைக்கக் கண்டேன் 2


மானிட வாழ்வி னுக்கு
மழைதருங் கருணை கண்டேன்
தேனமர் சோலை கண்டேன்
தீங்குயில் பயிலக் கண்டேன்
ஊனக வுயிருக் கெல்லாம்
உயிரெனும் சிவனைப் போற்றும்
ஞானமும் பணியும் அன்பும்
நடஞ் செய்யும் கோயில் கண்டேன்



கொஞ்சிடுங் கிளியும் யாழும்
குழந்தையும் குழலும் போலச்
செஞ்சோலை யினிது கேட்டேன்
செந்தமிழ் உயர்ந்த தென்றேன்
துஞ்சறு முயற்சி கண்டேன்
தொழில்களின் எழிலைக் கண்டேன்
வஞ்ச மில்லாத தோழர்
வாழ்புவி யொன்றைக் கண்டேன் 4

சந்தமார் தமிழை வேண்டின்
சாந்தமாம் வாழ்வு வேண்டின்
பந்தனை யற்ற புத்த
பகவனின் கருணை வேண்டின்
சிந்தையை உயர்த்தும் ஏசு
கிறிஸ்துவின் சிறப்பை வேண்டின்
எந்தையாம் சிவனை வேண்டின்
இலங்கையிற் காண லாமே! 5

வாரிசூழ் இலங்கை; மேக
வானகக் கருணை யாலே
மாரிசூழ் இலங்கை; நல்ல
மாந்தர்சூழ் இலங்கை; ஆன்ம
வீரர்சூழ் இலங்கை; அன்பின்
வெற்றிசூழ் இலங்கை; நல்ல
தீரர்சூழ் இலங்கை வாழ்க
தினகர ஜோதி போலே. 6



## செய்தித் திரட்டு.

### சுத்தானந்தரின் எதிர்பாராத

# இலங்கை விஜயம்

கல்கத்தா மார்க்கம் மலாயாவுக்குச் செல்லவிருந்த யோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியாரை பராசக்தியின் திருவருள் இலங்கைமார்க்கப் பிரயாணஞ்செய்யவைத்து, கொழும்பில் மூன்று தினங்களை மெய்யன்பர்கள் கூட்டத்தில் ஆனந்தமாய்ச் செலவிடச் செய்துவிட்டது: அவர் பிரயாணஞ்செய்யவிருந்த விமானம் குறித்தநேரத்திற்கு முந்திச்சென்றதும், அடுத்தவிமானம் யந்திரக் கோளாறு காரணமாக பிந்த வேண்டிவந்ததும் திருவருட் சித்தமாக நடந்தசம்பவங்களென சுவாமிகளே மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்டனர். அவர்கள் கொழும்பில் தங்கியிருந்த தினங்கள் பலர்க்கும் பயன்படும் முறையில் கழிந்தன, 3-5-52 இரவு கொள்ளுப்பிட்டியில் பிரார்த்தனைக்கூட்டத்தில் கலந்து பாடியும் பேசியும் அன்பர்களை மகிழ்வித்தனர், அடுத்த நாள் மாலை ஜிந்துப்பிட்டி சிவசுப்பிரமணிய சுவாமி கோவிலில் நடந்த கூட்டுவழிபாட்டில் ஓர் பிரசங்கம் செய்தார். திங்கள் 5-5-52 மாலை வெள்ளவத்தை சைவமங்கையர் கழக மண்டபத்தில் அவருக்கு தாய்மார்களால் ஓர் அரிய வரவேற்பு அளிக்கப்பட்டது. அத்தருணம் சுவாமிகள் பெண்ணின் பெருமையைப்பற்றியும் இல்லறதர்மத்தின் சிறப்பைப்பற்றியும் ஓர் நீண்ட உபந்நியாசஞ் செய்தார். அடுத்தநாள் மாலை சிங்கப்பூருக்குப் பிரயாணமானார். மலாயா விஜயம் முடிந்து தாய்நாடு திரும்பும்போது இலங்கையில் சிலதினங்கள் தங்கி மலைநாடு, திருக்கோணமலை, மட்டக்களப்பு யாழ்ப்பாணம் முதலிய இடங்களுக்கு விஜயஞ் செய்யப் போவதாகக் கூறியுள்ளார்.



ஓம்

யோகவாசிட்ட

## ஞானப் பெண் மணிகள்.

இயற்றியவர்

அருட்செல்வி ஞானசௌந்தரி அம்மையார்

விலை ரூபா 1-25

"தேவிகளே! நீங்கள் ஆடவருடன் சமத்துவம்கோரத்தேவையில்லை. உண்மையிலேயே நீங்கள் அவர்களைவிட உயர்ந்தவர்கள். நீங்கள் ஆடவரின் தாய்மார்கள். அவர்களின் குருமார்கள், அவர்களுக்கு பாதுகாப்பாளராகவும், ஆறுதலளிப்பவராகவும் ... செய்பவராகவும் நீங்கள் இருக்கின்றீர்கள். பராசக்தியின் வடிவங்களாகிய நீங்கள் மிக்கசக்திவாய்ந்தவர்கள்" என்ற சுவாமி சிவானந்தசரஸ்வதி அவர்களின் திருவாக்குக்குஇலக்கியமாக விளங்குவது இந் நூல்.

"ஆத்மானுபூதியடைதல் ஆடவர்களுக்கு மட்டுமே சொந்தமான உரிமையும் பேறுமல்ல. மகளிர்கள் அனைவருக்கும் கூடப்பிறப்புரிமையாக உள்ளவை" என்பதை இந் நூலாசிரியை தாம் எடுத்துக்கொண்ட விஷயங்கள் மூலம் நிரூபணம் செய்துள்ளார்.

யோகவாசிட்டக் கதைகள் பல இருப்பினும் ஆசிரியை தாமசி சுகர்க்கடி, ராஜசிகலீலை, சாத்வீக சூடாலை ஆகிய மூன்று கதைகள் மூலம் வாழ்க்கையின் அடிப்படையான தத்துவங்களை மிகவும்சுருக்கமாகவும் தெளிவான எளிய நடையிலும் விளக்கியிருக்கிறார்.

தமிழ் நாட்டிலுள்ள ஒவ்வொரு அன்னையரும் சகோதரிமாரும், மெய்ப்பொருளைத் தேடுபவர்கள் அனைவருமே வாசித்துப் பயன் பெறத் தக்கநூல். கீழ்க்கண்ட விலாசத்தில் நூலைப்பெற்றுக் கொள்ளலாம்.

காரியதரிசி, சிவானந்தசாதன நிலையம்

திருவரங்கோய்மலை

முசுரி தாலுக்கா

திருச்சிராப்பள்ளி ஜில்லா [S. I.]

Registered at the G P O as a News Paper No H C 59/300


# ஸ்ரீராமக்கிருஷ்ண விஜயம்.

[1921-ம் ஆண்டிலிருந்து வெளிவருகிறது]

- தமிழ்நாட்டில் தமிழ்மொழியில் தமிழ்மக்கட்கெனச் சமயத்தொண்டு புரியும் மாதப்பத்திரிகை.
- பண்டிதரும் பாமரரும் படித்து இன்புறக் கூடியது.
- பேரன்பு, மெய்யறிவு, துறவு, ஆற்றல், சமரசநோக்கு, அன்பர்பணி முதலான உயர் நோக்குகளை வாசிப்போரது உள்ளத்து எழுப்புவது,
- சமயப்பூசல், சாதிவேற்றுமை, மனச்சாய்வு, காமகாஞ்சன ஆசை முதலிய அழுக்குகளை எரிக்கும் ஞானக்கனலைத் தருவது,
- சாதனமுறைகளின் விளக்கம், பிரார்த்தனைகள் உயர்ந்தோர் கூறும் உறுதிமொழிகள், ஞானக்கதைகள் பெரியோரின் சம்பாஷணைகள் வரலாறுகள் முதலியன,
- ஸ்ரீராமக்கிருஷ்ணர் ஸ்ரீசுவாமி விவேகானந்தர் — இருவரது இலட்சியங்களையும் புகட்டுவது.

சந்தாதாரருக்குப் பல புத்தகங்கள் குறைந்தவிலைக்கு கொடுக்கப்படும். வருடசந்தா ரூபா 3/- தனிப்பிரதி ௸ 6|- ஒவ்வொரு தொகுதியும் தை மாதத்திலிருந்து தொடங்குகிறது. சந்தா தை அல்லது ஆடி மாதத்திலிருந்து தொடங்கலாம். கிடைக்குமிடம்.-

ஸ்ரீராமக்கிருஷ்ண மடம், மைலாப்பூர். சென்னை

---

## சிவதொண்டன்.

செந்தமிழ்-ஆங்கிலத் திங்கள் வெளியீடு,

மக்களுக்கு ஆத்மீகவாழ்வின் உயர்ந்த இலட்சியங்களைத் தெளிந்தநடையில் எடுத்துச்சொல்வதையே நோக்கமாகக்கொண்டது

சந்தாதாரராகச்சேர விரும்புவோர் பின்வரும் விலாசத்திற்கு எழுதி விபரம் அறியவும்

**சிவதொண்டன்**

105 கொழும்புத்துறை றோட்

யாழ்ப்பாணம் சிலோன்


---

கௌரவஆசிரியர் க. இராமச்சந்திரன். பதிப்பாசிரியர் நா முத்தையா

ஆத்மஜோதி நிலையம் நாவலப்பிட்டி இலங்கை

அச்சுப்பதிப்பு சரவண அச்சகம் நாவலப்பிட்டி 23-5-52